

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (22.07.2023) மேயர் இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்ற பாரிஸ் ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை ஆடுதளம் அமைத்தல், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை ஆடுதளம், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர் கூடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருச்சிராப்பள்ளி கேர் பொறியியல் கல்லூரியில் 27.07.2023 அன்று வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் வேளாண்மை சங்கமம்2023 வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளதை முன்னிட்டு, அதற்கான முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி ஆகியோர் 22.07.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வில், வேளாண்மை துறை ஆணையர் சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மத்திய மண்டல காவல்துறை தலைவர் கார்த்திகேயன், திருச்சி சரக காவல்துறை துணைத் தலைவர் சரவண சுந்தர், மேயர் மு.அன்பழகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜித் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பல தலைமுறைகளை கடந்தும் பயனளிக்கும் திட்டம்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்!

## தருமபுரியில் இன்று இதற்கான முகாமை தொடங்கி வைப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 24–**

**பல தலைமுறைகளையும் தாண்டி பயனளிக்கும் திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை இன்று தருமபுரியில் தொடங்கி வைக்க இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

மகளிர் முன்னேற்றத்தில் பெரும் பாய்ச்சலாக அமையவுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் சுற்றியே என் எண்ணங்கள் உள்ளன. தகுதி வாய்ந்த மகளிர் ஒருவர்கூட விடுபடாமல் இந்தத் திட்டம் போய்ச் சேர வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் வழங்கும் பணி ஏற்கனவே தொடங்கி விட்டது.

தமிழ்நாட்டு மகளிரின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் திட்டம் 1989-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட அதே தருமபுரி மண்ணில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான முகாமை வரும் இன்று (24.07.2023, திங்கட் கிழமை) தொடங்கி வைக்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் இந்த முகாம்களை அமைச்சர்கள் அனைவரும் சென்று பார்வையிட வேண்டும் என இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளேன்.

கலைஞர் 100-இல் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், ஒரு தலைமுறையையே மாற்றக்கூடிய திட்டம் மட்டுமல்ல; பல தலைமுறைகளைத் தாண்டியும் பயனளிக்கக்கூடிய திட்டமாக விளங்கும் என எண்ணித் துணிகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### வெட்கக் கேடான செயல் மணிப்பூர் சம்பவத்திற்கு கவுதம் காம்பீர் கருத்து!

*புதுடெல்லி, ஜூலை 24-*

*மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியின பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூர வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது தொடர்பாக தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார், முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும், பா.ஜ.க. மக்களவை உறுப்பினருமான கவுதம் கம்பீர்.*

*இது தொடர்பாக இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் மீதான இந்தக் கொடூர சம்பவம் தொடர்பாக தேசிய அளவில் பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், "இது மிகவும் வெட்கக்கேடானது. இந்தப் பிரச்சினை மணிப்பூர் மாநிலத்துக்குமானது மட்டுமல்ல. ஒட்டு மொத்த தேசத்துக்குமானது. அதனால் ஓர் இந்தியன் என்று நான் சொல்லிக்கொள்வதில் வெட்கப்படுகிறேன். இதனால், ஒட்டுமொத்த தேசத்துக்கும் தலைகுனிவு. இதுபோன்ற ஒரு சம்பவம் நாட்டில் எங்கும் நடக்கக் கூடாது" என கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.*






# தி.மு.க. இளைஞர் அணி

## ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

மாவட்ட – மாநில – மாநகர – அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் நிர்வாகிகளை நியமிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே இப்பொறுப்புகளுக்கு வர விரும்பும் இளைஞர்கள் 30.06.2023–க்குள் விண்ணப்பிக்குமாறு அறிவித்திருந்தோம். இந்நிலையில், இந்த கால அவகாசத்தை நீட்டிக்குமாறு பல்வேறு தரப்புகளில் இருந்து கோரிக்கைகள் வந்ததைத் தொடர்ந்து விண்ணப்பங்கள் அளிப்பதற்கான கால அவகாசம் 31.07.2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, அன்பகத்திலோ வழங்கலாம். அளிக்கப்படும் விண்ணப்பங்களை முறையான படிவத்தில் பூர்த்தி செய்து அந்த படிவத்துடன் விண்ணப்பங்களையும் இணைத்து அன்பகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்ட வாரியாக நேர்காணல் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.



## தி.மு.க. இளைஞர் அணி

அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்

சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ..............................................

சட்டமன்றத் தொகுதி : ..............................................

ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் : ..............................................

மாநிலம், தொகுதி (புதுச்சேரி–காரைக்கால் மட்டும்) : ..............................................

பொறுப்பு : ☐ அமைப்பாளர்
☐ துணை அமைப்பாளர்

பெயர் : ..............................................

தந்தை பெயர் : ..............................................

பிறந்த தேதி : .............................. வயது..................

கல்வித் தகுதி : ..............................................

தொழில் : ..............................................

முகவரி : ..............................................
..............................................

வாட்ஸ்–அப் எண் : ..............................................

மின்னஞ்சல் : ..............................................

இளைஞர் அணியில் உறுப்பினராகச் சேர்ந்த ஆண்டு : ......................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும் விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 22–07–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி